பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 13 புதன்கிழமை 26.01.2022 கதிர் 308

## குளவிகள் கொட்டியதில் 25 மாணவர்கள் பாதிப்பு

வெலிமடைப் பகுதியின் லூணுவத்தை தேசியக் கல்லூரியின் ஆசிரியர் ஒருவர் உள்ளிட்ட மாணவர்கள் 25 பேர், குளவிக் கொட்டுக்கு இலக்காகி, ஊவா - பரணகமை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

மேற்படி கல்லூரி அருகிலுள்ள கித்துல் மரத்திலிருந்த குளவிக்கூடு கலைந்து, ☞2

# சம்பிக்க என்ன ஆட்டம் போட்டாலும் சஜித்தான் ஜனாதிபதி வேட்பாளர்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் மீண்டும் திட்டவட்டம்





சம்பிக்க ரணவக்க என்னதான் ஆட்டங்கள் போட்டாலும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸதான். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி ஊடாகப் போட்டியிட்டு, நாடாளுமன்றத்துக்குத் தெரிவான முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க 43ஆம் படையணி எனும் அரசியல் இயக்கத்தை உருவாக்கியுள்ளார். அதனைப் பலப்படுத்தி வருகின்றார். அண்மையில் மாநாடொன்றையும் நடத்தியிருந்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே சம்பிக்க இவ்வாறு செயற்படுகின்றார் என அரசியல் வட்டாரங்களில் கதை அடிபடுகின்றது.

இந்நிலையில், இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர்,

சம்பிக்க எம்முடனேயே இருக்கின்றார். அவர் தனி அணியொன்றை உருவாக்கினால்கூட அது எமக்குப் ☞2








# நீதி அமைச்சின் நடமாடும் சேவைக்கு எதிராக காணாமல்போனோரின் உறவுகள் போராட்டம்

## வவுனியா மாவட்ட செயலகத்துக்குள் நுழைய முற்பட்டதால் பதற்றம்

**(வவுனியா நிருபர்)**

**வவுனியாவில் நீதி அமைச்சின் நடமாடும் சேவைக்கு எதிராக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் மாவட்ட செயலக வளாகத்துக்குள் நுழைய முற்பட்டதால் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், பொலிஸார் குவிக்கப்பட்டு முறுகல் நிலை ஏற்பட்டது.**

**காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணை உள்ளடங்களாக நீதி அமைச்சின் நடமாடும் சேவை வவுனியா மாவட்ட செயலகத்தில் இன்று காலை நடைபெற்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியா மாவட்ட செயலகம் முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.** ☞2

### கடும் எதிர்ப்புக்களையடுத்து

## இலங்கை மின்சார சபை தலைவர் இராஜினாமா!

இலங்கை மின்சார சபையின் தலைவர் எம்.எம்.சி. பேர்டினண்டோ தனது பதவியை இராஜிநாமா செய்வதற்குத் தீர்மானித்துள்ளார். இது தொடர்பான கடிதத்தை அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார். ☞2



## நீதி அமைச்சின் வடக்குக்கான முதலாவது நடமாடும் சேவை வவுனியாவில் ஆரம்பம்

(வவுனியா நிருபர்)

நீதி அமைச்சின் வடக்கு மாகாணத்துக்கான முதலாவது நடமாடும் சேவை வவுனியாவில் இன்று நடைபெற்றது.

நீதி அமைச்சு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் ஊடான சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக நாடளாவிய ரீதியில் 'நீதிக்கான அணுகல்' எனும் ☞2



## கற்பிட்டியில் கரையொதுங்கிய சடலம் வெளிநாட்டவருடையதா?



கற்பிட்டி, கண்டக்குளி கடற்கரைப் பகுதியில் இனந்தெரியாத நபர் ஒருவரின் சடலம் நேற்று மாலை கரையொதுங்கியுள்ளது எனக் கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர். ☞2



## 73ஆவது இந்தியக் குடியரசு தின நிகழ்வு யாழில்

73 ஆவது இந்தியக் குடியரசு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக அலுவலகத்தில் இன்று காலை 9 மணிக்கு நிகழ்வுகள் நடைபெற்றன.

## பெண்ணின் சடலம்: ஒருவர் சிக்கினார்!

பதுளை, 6 ஆம் கட்டை பகுதியில் வயோதிபப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில், ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார்முன்னெடுத்தவிசாரணையில் சந்தேகநபர் வெளஸ்ஸ தோட்டப பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதானவர் வெவெஸ்ஸ தோட்டத்தைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதுளை - 6 ஆம் கட்டை பகுதியில் உள்ள தேயிலை தோட்டத்தில் இருந்து 60 வயதான பெண் ஒருவர் ☞2

## நீதி அமைச்சின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட நடமாடும் சேவை முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக வடக்கு மாகாணத் துக்கான முதலாவது நடமாடும் சேவை வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ரோகிணி கெட்டிகே தலைமையில் இன்று காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம்பெற்றது.

இதன்போது, பொதுமக்களைப் பாதிக் கும் சட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டல், நல்லிணக்கம் குறித்து மக் களுக்குத் தெளிவுபடுத்துதல், வடக்கு மாகாண மக்களின் காணிப் பிரச்சி னைகளுக்கான தீர்வு தொடர்பில் ஆலோ சனை வழங்கல், பிறப்பு - திருமணம் மற் றும் இறப்பு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுதல், காணாமல்போனோர் பற் றிய அலுவலகத்தின் சேவைகளை வழங் குதல் என்பன முன்னெடுக்கப்பட்டன.

நீதி மற்றும் சிறைச்சாலை அமைச்சுக்க ளின் கீழுள்ள காணோமல்போணோர் பற்றிய அலுவலகத்தின் சேவை நிலையம், இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை மத்தியஸ்தர் சபைகள் ஆணைக் குழு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட பல அரச நிறுவனங்கள் கலந்து கொண்டு மக்களுக்கும் அரச அதிகாரிக ளுக்கும் ஆலோசனைகளை வழங்கிய துடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் குறித்தும் தெளிவுபடுத்தி னர்.

நிகழ்வில் நீதிச் சேவை ஆணைக்குழு பணிப்பாளர் சந்திக்க லொக்கு கெட்டி, நீதிச் சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ரோகிணி கெட்டிகே, நீதிச் சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளர் சந்திர மாலனி, இழப்பீட்டு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் நாசிமா அகமட், வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத் சந்திர ஆகியோர் கலந்துகொண் டனர். (100)

## பெண்ணின் சடலம்: ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டி ருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

## இலங்கை மின்சார .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி எதிர்வரும் முத லாம் திகதி முதல் அவர் பதவியில் இருந்து விடைபெற வுள்ளார்.

யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தி ன் அரசுக்கு சொந்தமான பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றுவதற் கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதை யடுத்து, அவருக்குக் கடும் எதிர்ப்புக்கள் வலுத்தன. பதவி நீக்கம் செய்யுமாறு தொழிற்சங்கங்கள் வலியுறுத்தி வந்தன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே பதவி விலகும் முடிவை அவர் எடுத்துள் ளார்.

## கற்பிட்டியில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த பகுதியில் சடலம் ஒன்று காணப்படுகின்றது என மீனவர் ஒருவர் கற்பிட்டிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

குறித்த தகவலில் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த கற் பிட்டிப் பொலிஸாரும், பொலிஸ் தடயவி யல் பிரிவினரும் இணைந்து அது தொடர் பில் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இவ்வாறு கரையொதுங்கிய சடலம் அடையாளம் காண முடியாத வகையில் உருக்குலைந்து காணப்படுகின்றது எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், குறித்த சடலம் வெளிநாட் டவர் ஒருவருடையதாக இருக்கலாம் எனத் தாம் சந்தேகிப்பதாகவும், எனினும் அது தொடர்பில் விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் கூறினர்.

இவ்வாறு உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய குறித்த சடலம் நீதி வான் விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தி யசாலையின் பிரேத அறையில் வைக் கப்பட்டுள்ளது.

## நீதி அமைச்சின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா மாவட்ட செயலகம் முன் பாக ஒன்றுகூடிய காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவுகள், நீதி அமைச்சால் நீதி கிடைப்பதில்லை, கால அவகாசம் வேண் டாம் நீதி தான் வேண்டும், செயல் திற னற்ற ஓ.எம்.பியை நம்பிக் காலத்தைக் கடத்தாது இலங்கையை சர்வதேச குற்ற வியல் நீதி மன்றத்தில் பாரப்படுத்துங்கள் என எழுதப்பட்ட பதாதைகளையும், காணாமல் ஆக்கப்பட்டோரின் புகைப்படங் களையும், கறுப்புக் கொடிகளையும் தாங் கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது நீதி அமைச்சின் நட மாடும் சேவை நடைபெற்ற மாவட்ட செய லக வளாகத்துக்குள் காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகள் நுழைய முற்பட்ட போது பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். இதனால் இரு பகுதியினருக் கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. பொலிஸார், காணாமல் ஆக்கப்பட்டோ ரின் உறவுகளை அவ்விடத்தில் இருந்து வெளியேற்ற கடும் பிரயத்தனம் செய்த னர். பொலிஸார் பெருமளவில் அங்கு குவிக்கப்பட்டதால் பதற்ற நிலை ஏற்பட் டது.

இருப்பினும், காணாமல் ஆக்கப்பட் டோர் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் சில தாய்மார் கதறியழுது மயங்கி விழுந்த நிலையில் நோயாளர் காவு வண்டி மூலம் வைத்தியசாலைக் குக் கொண்டு செல்லப்பட்டனர். போராட் டம் தொடர்ந்தும் இடம்பெற்றதையடுத்து நீதிச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் கள் சிலர் காணாமல் ஆக்கப்பட்ட உறவு களுடன் மாவட்ட செயலக வாசலுக்குச் சென்று கலந்துரையாடியதுடன், அவர் களைத் தமது நடமாடும் சேவைக்கு வரு மாறும் அழைத்தனர். ஆனால், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அதற்கு மறுப்பு தெரிவித்து அங்கிருந்து வெளி யேறிச் சென்றனர். (100)

## சம்பிக்க என்ன ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலமாகவும், அரசுக்குப் பாதிப்பாகவுமே அமையும். யார் எப்படியான அரசியல் நகர்வை முன்னெடுத்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி யின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேம தாஸதான் - என்றனர்.

## குளவிகள் கொட்டி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரிய ரைத் தாக்கத் தொடங்கின.

இதையடுத்து, ஏனைய மாணவர்க ளில் சிலர் அப் பகுதியில் குப்பை, கூளங் களை எரியூட்டி, புகையை எழுப்பினர். அத்துடன் குளவிகள் அடங்கியதும், குள வித் தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியர் உள்ளிட்ட 25 மாணவர்கள், ஊவா - பர ணகமை அரசினர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, சிகிச்சைகள் அளிக்கப்பட்டனர். இவர்களில் 8 மாண வர்கள் மட்டும் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். ஏனையோர் வைத்திய சாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல் களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எரிபொருள் நெருக்கடி

நாட்டில் மின்வெட்டு வராமல் பார்த்துக் கொள்ளுங்கள் என்று அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கின்றார். அதற்குத் தேவையான எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கான நிதியை – அந்நியச் செலாவணியை – விடுவிக்குமாறும் திறைசேரி அதிகாரிகளை அவர் பணித்திருக்கின்றார்.

அதனால் மின்வெட்டு வராது, நிலைமை சீராகும் என்று தான் பலரும் நம்புகின்றனர். ஆனால் களநிலைவரம் அப்படியல்ல என்று விடயமறிந்த வட்டாரங்கள் சில தகவல் வெளியிடுகின்றன.

உரிய நிதியை விடுவிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டாலும் 'மந்திரத்தால் மாங்காய் பறிப்பது எப்படி?' என்று நிதித்துறை வட்டாரங்கள் கேட்கின்றன. 'வெறும் கையால் முழம் போட்டு' நிதியை ஒதுக்கீடு செய்வது என்பது சாத்தியமற்றது.

எனினும் வேறு தேவைகளுக்கான நிதியை இப்போதைக்கு உடனடியான – அவசர – எரிபொருள் கொள்வனவுக்கு ஒதுக்கீடு செய்தாலும், அது தற்காலிக ஒழுங்காகத்தான் இருக்க முடியும். அடுத்த கட்ட கடன் உதவி சீனா, இந்தியா போன்ற தரப்புகளிடம் இருந்து வர இருப்பதால் அடுத்த ஓரிரு வாரங்களுக்கு அந்தக் கணக்கை இந்தக் கணக்குக்குத் திருப்பி, இந்த நிதியை வேறொன்றுக்கு ஒதுக்கி என்று சில விடயங்களைக் கையாண்டாலும், அது அடுத்த ஓரிரு மாதங்களுக்கான ஒழுங்குமுறையாகக் கூட அது இருக்காது என அந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றமை சரியாகத்தான் இருக்கும் என்று படுகின்றது.

நாட்டின் எரிபொருள் இறக்குமதி தடைப்பட்டமையை அடுத்து சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் மூன்று வாரங்களுக்கு முன்னர் செயலிழந்தது. எனினும் ஜனாதிபதியின் உத்தரவில் எரிபொருளுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, எரிபொருள் கிட்டும் சூழ்நிலை ஏற்பட்டமையால் அதனை நாளை முதல் மீள இயக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் எரிபொருள் தாங்கிக் கப்பல்கள் வந்து சேருவதிலும், எரிபொருளை இறக்குவதிலும் தாமதம் ஏற்பட்டமையை அடுத்து நிலையத்தை திரும்பவும் இயக்க ஆரம்பிப்பதை வரும் ஞாயிற்றுக்கிழமைக்குத் தள்ளி வைக்கத் தீர்மானமாகியிருப்பதாக மின் சக்தி அமைச்சின் செயலாளர் கே.டி.ஆர்.வொல்கா தெரிவித்திருக்கின்றார்.

அவரது அமைச்சின் தகவலின்படி எரிபொருள் தாங்கிக் கப்பல் ஒன்று இன்று கொழும்பு வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்டது.

அந்தக் கப்பலுக்கான நிதிக் கொடுப்பனவு, எரிபொருள் இறக்குவது போன்ற ஏற்பாடுகளும் முழுமையாகப் பூரணப்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டமையால் இந்தக் கப்பலின் எரிபொருள் தாமதமின்றி இறக்கப்படும். அடுத்த ஓரிரு நாள்களுக்கு மின்வெட்டு நேரும் சாத்தியம் இல்லை என்றெல்லாம் நம்பலாம்.

இது ஒருபுறம் என்றால், எரிபொருள் நெருக்கடியால் ரயில் சேவை பாதிப்புறும் ஆபத்து இருப்பதாக மற்றொரு தகவல் வெளியாகியிருக்கின்றது.

ரயில் சேவையை ஒழுங்காக இயக்குவதற்கு தினசரி ஒரு லட்சம் லீற்றர் எரிபொருள் தேவை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ரயில்வேத் திணைக்களம் குறைந்தபட்சம் ஆறு லட்சம் லீற்றர் எரிபொருளைக் கையிருப்பில் வைத்திருப்பது வழமை. அது இப்போது மூன்றரை லட்சமாகக் குறைந்துள்ளது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரயில்வேத் திணைக்களத்துக்குத் தேவையான எரிபொருளை நாளாந்தம் ஒழுங்காக வழங்காவிட்டால் ரயில் சேவை பாதிப்புறும் நிலைமை ஏற்படுவதும் தவிர்க்க முடியாதது என்று ரயில்வே தொழிற்சங்கக் கூட்டணியின் இணை ஒருங்கிணைப்பாளர் பி.விதானகே சுட்டிக்காட்டியுள்ளார்.

மின் விநியோகத்தை அடுத்து போக்குவரத்துத்துறையும் பெரும் ஆபத்தை – நெருக்கடியை – எதிர்நோக்க இருக்கின்றது என்பதே நிலைமையாகும்.

# இராணுவத்தினர் துப்பாக்கி சூடு; கடத்தல்காரர்கள் தப்பியோட்டம்!

## கொடிகாமத்தில் சம்பவம்

யாழ்.கொடிகாமம் – கெற்பேலி பகுதியில் மணல் கடத்தல் கும்பல் மீது இராணுவம் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளது.

துப்பாக்கி சூட்டு சம்பவத்தையடுத்து மணல் கடத்தல் கும்பல் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் குறித்த சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்றது.

மணல் கடத்தல் இடம்பெறுவதாகக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, சம்பவ இடத்தை முற்றுகையிட்ட இராணுவத்தினர், கடத்தல்காரர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்த போது தப்பி ஓடியுள்ளனர். இதனையடுத்து துப்பாக்கி சூடு இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தையடுத்து உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதி கைது செய்யப்பட்டார். உழவு இயந்திரமும் அதன் சாரதியும் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர்.

# சுகாதாரப் பணியாளர்கள் மத்தியில் கொவிட் தொற்று பரவுகை அதிகரிப்பு

## அகில இலங்கை தாதியர் ஒன்றியம் குற்றச்சாட்டு

சுகாதாரப் பணியாளர்கள் மத்தியில் கொவிட் பெருந்தொற்று பரவுகை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை தாதியர் ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொவிட் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கமும் சுகாதார அமைச்சும் உரிய நடவடிக்கைகளை எடுக்கத்தவறியுள்ளன என தாதியர் ஒன்றியத்தின் தலைவர் எச்.எஸ்.எம்.பி. மெதிவத்த தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மூன்று கர்ப்பிணிகள் உள்ளடங்களாக 60 தாதியரும், 150 வைத்தியர்களும் கொவிட் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் உள்ளிட்ட அனைவரையும் பணிக்கு திரும்புமாறு அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது.

கொவிட் காரணமாக ஏற்கனவே அரசாங்க சேவைகளில் காணப்பட்ட வரையறைகளை நீக்கி, வழமையான சேவையை அரசாங்கம் அறிவித்திருந்தது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் சுகாதாரப் பணியாளர்கள் அபாயங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்க வேண்டுமென கோரவில்லை எனவும், பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிகளுக்கு விடுமுறை வழங்கப்பட வேண்டுமெனவும் தொழிற்சங்கம் கோரியுள்ளது.

# அரச அச்சுத் திணைக்களம் அகற்றிய கடதாசி விற்பனையிலும் முறைகேடுகள்

வெகுஜன ஊடகத்துறை அமைச்சுக்கு உட்பட்ட அரசாங்க அச்சகத்தில், அகற்றப்பட்ட கடதாசி விற்பனையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக ஆராய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெஜன ஊடக அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் மூலம் தினமும் சுமார் 2 ஆயிரத்து 500 தொன் கடதாசி கழிவாக அகற்றப்படுகின்றது. இவற்றுக்கான விற்பனையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடு தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், தொழிற்சங்கங்களுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வரும் தற்போதைய சூழ்நிலையில் இந்த விடயத்தில் தலையிட்டமைக்காக அரசாங்க அச்சக தொழிற்சங்கத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.

# கொழும்பு வைத்தியசாலைகளில் நிரம்பி வழிகின்றனர் நோயாளர்!

கொழும்பு – அங்கொடை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சேர்க்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஹசித்த அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் மீண்டும் தீவிரமடைந்துள்ள கொவிட் வைரஸ் பரவலுக்கு மத்தியில், இவ்வாறு அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்படும் நோயாளர்களுக்கான ஒக்சிசனின் தேவையும், சடுதியாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், இந்த வாரம் கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை 50 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சேர்க்கப்படும் நோயாளர்களுக்கு வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளில், 50 முதல் 60 வீதமான பரிசோதனைகளில் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், எதிர்வரும் ஓரிரு வாரங்களில் பெருமளவிலான நோயாளர்கள் நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் பதிவாகலாம் என வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஹசித்த அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை,கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளின் சகல படுக்கைகளிலும் தற்போது கொவிட் நோயாளிகள் நிரம்பியுள்ளகத் என வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் அந்தோனி மென்டிஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரத்தோட்டையில் மாணவர் பரிதாபகரமாக உயிரிழப்பு!

ரத்தோட்டை, சுது கங்கையில் ஜமன்வத்தை பகுதியில் நீராட சென்ற பாடசாலை மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இரண்டு நண்பர்களுடன் நீராடச் சென்ற 17 வயதுடைய மாணவன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து காணாமல் போன மாணவனை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன், ரத்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரசவத்தின்போது குழந்தை இறப்பு விகிதம் அதிகரிப்பு!



ஸ்காட்லாந்தில் கொரோனாத் தொற்றுக்கு எதிராக விஞ்ஞானிகள் பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக ஸ்காட்லாந்து பொது சுகாதாரத் துறையுடன் வெலிங்டன் விக்டோரியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இணைந்து, கொரோனாப் பாதிப்பால் பாதிக்கப்படும் கர்ப்பிணிகள் என்ற தலைப்பில் ஒரு ஆய்வை நடத்தினர்.

அந்த ஆய்வில், ஸ்காட்லாந்தில் தடுப்பூசி திட்டத்தை செயல்படுத்தியதில் இருந்து மொத்தம் 4 ஆயிரத்து 950 கர்ப்பிணிகள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இவர்களில் 77 சதவீதத்தினர் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகளின் பிரசவத்தின்போது குழந்தை இறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 23 என்ற அளவில் அதிகரித்துள்ளது.

இதேபோன்று தொற்றுப் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகளில் 17 சதவீதத்தினர் பிரசவ காலத்திற்கு முன்னதாகவே பிரசவித்துள்ளனர். இத்தகைய பாதிப்புகள் கண்டறியப் பட்ட பெண்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக விஞ்ஞானி ஒருவர் கூறுகையில், கர்ப்பிணி பெண்களிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வின் மூலமாக கொரோனாவிற்கு பிந்தைய பல பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக தடுப்பூசி பெற்ற கர்ப்பிணிகளின் பிரசவத்தின்போது குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 4 ஆகவும், குறைமாத பிறப்பு விகிதம் 8 சதவீதமாகவும் குறைந்துள்ளது. இது கர்ப்ப காலத்தில் தடுப்பூசியின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துகிறது.

# யுக்ரைன் எல்லையில் அமெயின் ஆயுதங்கள்

## ரஷ்யாவின் வீரர்கள் குவிப்பு



உக்ரைனின் எல்லையில், ரஷ்யா ஒரு லட்சம் வீரர்களைக் குவித்திருக்கும் நிலையில், அமெரிக்கா அங்கு ஆயுதங்களை அனுப்பியிருக்கிறது. பிரிட்டன் தனது வீரர்களை அனுப்பத் திட்டமிட்டிருக்கிறது. இதனால் அங்கு பதற்றம் அதிகரித்திருக்கிறது.

இந்த நிலையில், ரஷ்யாவுக்கு ஆதரவானவரை யுக்ரைனின் அதிபராக நியமிக்க விளாடிமிர் புடின் திட்டமிட்டிருப்பதாக பிரிட்டன் குற்றம்சாட்டியுள்ளது.

முன்னெப்போதும் இல்லாத வகையில், உக்ரைன் எம்.பி. யெவென் முரயேவ் என்பவரது பெயரைக் குறிப்பிட்டு, அவரை நாட்டின் அதிபராக்க ரஷ்யா முயல்வதாக பிரிட்டன் வெளியுறவுத்துறை கூறியிருக்கிறது.

ரஷ்யா ஒரு லட்சம் துருப்புக்களை உக்ரைனுடனான தனது எல்லைக்கு அருகில் குவித்துள்ளது. ஆயினும் உக்ரைன் மீது படையெடுக்கப் போவதாக வெளியாகும் தகவல்களை அது மறுத்துள்ளது.

ரஷ்யா யுக்ரைனுக்குள் ஊடுருவினால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என பிரிட்டன் அமைச்சர்கள் எச்சரித்துள்ளனர்.

வெளியாகியிருக்கும் தகவல்கள் உக்ரைனைத் தகர்ப்பதற்கு ரஷ்ய எடுத்துவரும் நடவடிக்கையின் அளவை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. என்று பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் லிஸ் ட்ரஸ் கூறினார்:

ரஷ்யா பதற்றத்தைத் தணிக்க வேண்டும். ஆக்கிரமிப்பையும் தவறான தகவல் கொண்ட பரப்புரையையும் முடிவுக்கு கொண்டு வர வேண்டும். ராஜீயப் பாதையை தொடர வேண்டும்

பிரிட்டனும், கூட்டாளிகளும் மீண்டும் மீண்டும் கூறி வருவது போல், உக்ரைனில் ரஷ்ய இராணுவ ஊடுருவல் என்பது கடுமையான சேதத்தை ஏற்படுத்தும் ஒரு பெரிய மூலோபாயத் தவறாக இருக்கும்.

2014 ஆம் ஆண்டு கிரிமியாவை தன்னுடன் இணைத்துக் கொண்ட போது யுக்ரைனின் பகுதியை ரஷ்யா கைப்பற்றியது.

2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ரஷ்யப் படைகள் எல்லையில் குவிக்கப்பட்ட நிலையில், மற்றொரு படையெடுப்பு அல்லது ஊடுருவல் நிகழலாம் என்று மேற்கத்திய, யுக்ரைனிய உளவு அமைப்புகள் கூறுகின்றன. ஆனால் எந்தத் தாக்குதலுக்கும் திட்டமிடவில்லை என்று ரஷ்யா மறுத்துள்ளது.

பிரிட்டன் வெளியுறவு அமைச்சகம் தவறான தகவல்களைப் பரப்புகிறது என்றும், ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை நிறுத்தவும் தனது டுவிட்டர் பக்கத்தில் ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் வலியுறுத்தியது.

ஊடக அதிபரான முராயேவ் 2019 தேர்தலில் அவரது கட்சி 5% வாக்குகளைப் பெறத் தவறியதால், அவருக்கு உக்ரைன் நாடாளுமன்றத்தில் இடம் கிடைக்கவில்லை.

பிரிட்டன் வெளியுறவு அமைச்சகம் குழப்பத்தில் இருப்பதாகத் தெரிகிறது என்று அவர் அப்சர்வர் செய்தித்தாளிடம் கூறியுள்ளார்.

இது தர்க்கத்துக்கு ஒவ்வாதது. நான் ரஷ்யாவில் தடை செய்யப்பட்டுள்ளேன். அங்குள்ள எனது தந்தையின் நிறுவனத்தில் இருந்து பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்று முராயேவ் கூறினார்.

ரஷ்ய உளவு அமைப்புகளுடன் தொடர்புகளைப் பேணி வருவதாக வேறு நான்கு உக்ரைனிய அரசியல்வாதிகளையும் பிரிட்டன் வெளியுறவு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

2014 இல் பதவியில் இருந்து அகற்றப்பட்ட ரஷ்ய ஆதரவு அதிபர் விக்டர் யானுகோவிச்சின் கீழ் பிரதமராக பணியாற்றிய மைகோலா அசாரோவும் அவர்களில் அடங்குவர்.

அஸரோவ் பின்னர் ரஷ்யாவுக்குத் தப்பிச் சென்றார், அங்கு அவர் நாடுகடந்த ஒரு பொம்மை அரசாங்கமாக பரவலாக அறியப்பட்ட ஒன்றை நிறுவினார்.

யுக்ரைனின் தேசிய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு கவுன்சிலின் முன்னாள் துணைத் தலைவரான வோலோடிமிர் சிவ்கோவிச் என்பவரின் பெயரையும் பிரிட்டன் வெளியுறவு அமைச்சகம் கூறியிருக்கிறது. ரஷ்ய உளவுத்துறையுடன் தொடர்பு இருப்பதாகக் கூறி அவருக்கு அமெரிக்கா தடைகளை விதித்திருக்கிறது.

யானுகோவிச்சின் ஆட்சியில் துணைப் பிரதமராகப் பணியாற்றி செரி அர்புஸோவ், அன்ட்ரிக்ளுயேவ் ஆகியோரின் பெயர்களையும் பிரிட்டன் வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

சனிக்கிழமையன்று யுக்ரைனில் பதற்றத்தைக் குறைக்க ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சரும் அவரது அமெரிக்க வெளியுறவு அமைச்சரும் பேச்சுக்களை நடத்திய சில மணி நேரங்களுக்குப் பிறகு, அமெரிக்கவின் மரண உதவி சனிக்கிழமை கீவ் வந்தடைந்தது.

முன்கள வீரர்களுக்கான வெடிமருந்துகள் உள்ளிட்டவை இந்தத் தொகுப்பில் அடங்கும்.

2015 ஆம் ஆண்டிலிருந்து டஜன் கணக்கான பிரிட்டிஷ் துருப்புக்கள் யுக்ரைனில் பயிற்சிக்காக தங்கியுள்ளன. 2014இல் ரஷ்யா கிரைமியா மீது படையெடுத்ததைத் தொடர்ந்து உக்ரைனின் கடற்படையை மீண்டும் கட்டியெழுப்ப உதவ பிரிட்டனும் உறுதியளித்துள்ளது.

இந்த வார தொடக்கத்தில், ஆயுதங்கள் மற்றும் கூடுதல் துருப்புக்களை யுக்ரைனுக்கு அனுப்புவதாகவும் அறிவித்தது.

பிரிட்டன், அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுடன் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் பல முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகள் தங்களில் ஒருவருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தப்படுவது அனைவருக்கும் எதிரான தாக்குதலாகக் கருதுகின்றன.

ஐரோப்பாவில் கிழக்கை நோக்கி நேட்டோ விரிவடையாது என்று 1990ல் அளித்த உத்தரவாதத்தை அமெரிக்கா மீறிவிட்டது என்று ரஷ்யாவின் அதிபர் புதின் நீண்ட காலமாகக் கூறி வருகிறார். அவர்கள் எங்களை ஏமாற்றிவிட்டார்கள்! என்று கடந்த மாதம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறினார்.

ஆனால் அப்போதைய சோவியத் தலைவரான மைக்கேல் கோர்பச்சேவுக்கு சரியாக என்ன வாக்குறுதி அளிக்கப்பட்டது என்பதில் பல்வேறு மாறுபட்ட விளக்கங்கள் தரப்படுகின்றன.

அப்போதிருந்து, சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் நேட்டோவில் இணைந்துள்ளன. அவற்றில் போலந்து, லிதுவேனியா, லாட்வியா மற்றும் எஸ்டோனியா ஆகியவை ரஷ்யாவுடன் எல்லைகளைக் கொண்டுள்ளன.

இந்த விரிவாக்கம் மற்றும் அதன் எல்லைகளுக்கு அருகே நேட்டோ துருப்புக்கள் மற்றும் ராணுவ உபகரணங்கள் இருப்பது அதன் பாதுகாப்புக்கு நேரடி அச்சுறுத்தல் என்று ரஷ்யா வாதிடுகிறது.

2014 ஆம் ஆண்டு யுக்ரைனியர்கள் தங்கள் ரஷ்ய சார்பு அதிபரை பதவியில் இருந்து அகற்றியபோது, தெற்கு உக்ரைனில் உள்ள கிரைமியா தீபகற்பத்தை ரஷ்யா கைப்பற்றியது. அப்போதிருந்து, யுக்ரைனின் ராணுவம் ரஷ்யாவின் எல்லைகளுக்கு அருகிலுள்ள கிழக்குப் பகுதிகளில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுடன் போரில் ஈடுபட்டுள்ளது.

# பலுசிஸ்தான் மாகாணத்தில் பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை



பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாண தலைநகர் குவெட்டாவின் கிழக்கு பைபாஸ் பகுதியில் பயங்கரவாத எதிர்ப்புத் துறையின் நடவடிக்கையில் குறைந்தது ஆறு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பயங்கரவாத எதிர்ப்புத் துறையை மேற்கோள் காட்டி இது குறித்த செய்தி வெளியாகியுள்ளது.

இதன்போது, தீவிரவாதிகள் பதுங்கியிருந்த இடத்தில் இருந்து ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த பயங்கரவாத கும்பலில் இருந்த ஒருவரை பிடிப்பதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் 20 லட்சம் டொலர் பரிசுத்தொகையை அறிவித்திருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, முன்னதாக கடந்த சனிக்கிழமை, பாகிஸ்தானின் வடமேற்கு கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் பொலிஸாருடன் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதன்போது, பயங்கரவாதிகள் பயங்கரவாத எதிர்ப்புத் துறையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர், அதற்கு பலமாக பதிலடி கொடுக்கப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தென் சீனக் கடற்பகுதியில் அமெ. போர் விமானம் விபத்து



தென் சீனக் கடற்பகுதியில் அமெரிக்க போர் விமானமொன்று விபத்துக்குள்ளானதில், ஏழு அமெரிக்க இராணுவ வீரர்கள் காயமடைந்தனர் மற்றும் விமானி வெளியேற்றப்பட்டதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.

யு.எஸ்.எஸ். கார்ல் வின்சன் என்ற விமானம் தாங்கி கப்பலின் மேல்தளத்தில் எஃப் - 35சி போர் விமானம் தரையிறங்கிய போது இந்த விபத்து சம்பவித்துள்ளது.

தென் சீனக் கடலில் வழக்கமான விமான நடவடிக்கைகளின் போது இந்த சம்பவம் நடந்ததாகக் கடற்படை அறிக்கை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'விமானத்தில் இருந்து விமானி பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டார் மற்றும் அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்பட்டார். விமானி நிலையான நிலையில் உள்ளார். மொத்தம் ஏழு மாலுமிகள் காயமடைந்துள்ளனர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணிலாவில் உள்ள ஒரு மருத்துவ வசதிக்கு மூன்று இராணுவ வீரர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் நான்கு பேர் கப்பலில் சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டனர் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. வெளியேற்றப்பட்ட அனைத்து இராணுவ வீரர்களும் நிலையான நிலையில் இருப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பசிபிக் கடல் பகுதியில் சீன ஆக்ரமிப்பை தடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்க கடற்படை ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியக் குடியரசுத் தினத்துக்கு அமெரிக்கா வாழ்த்துத் தெரிவிப்பு






இந்திய குடியரசு தினத்தையொட்டி இந்திய மக்களுக்கு அமெரிக்கா வாழ்த்து தெரிவித்துள்ளது. அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி, அமெரிக்காவின் உத்தியோகபூர்வ வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.

இந்தியா - அமெரிக்கா கூட்டணி, ஜனநாயக மதிப்பீடுகளை நிலை நிறுத்துவதில் உறுதியாக உள்ளது. இந்திய குடியரசு தினத்தை கௌரவிப்பதில் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவுடன் நாங்கள் இணைகிறோம்.

கடந்த செப்ரெம்பரில் இந்தியப் பிரதமர் மோடி வெள்ளை மாளிகைக்குச் வந்தபோது இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவு வலுவாகவும், நெருக்கமாகவும், இறுக்கமாகவும் இருக்க வேண்டும் என்று அதிபர் ஜோ பைடன் கூறினார். அது முழு உலகிற்கும் பயனளிக்கும் என்றும் அவர் தனது செய்தியில் கூறியுள்ளார்.



# பீகாரில் வன்முறையில் ஈடுபட்ட மாணவர்கள் பலர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் காயம்

பீகாரில் ரயில் ஆள் தேர்வு வாரியம் நடத்திய போட்டித் தேர்வுகளில் முறைகேடு நடந்ததாக கூறி தேர்வு எழுதியவர்கள் மற்றும் மாணவர்கள் கடந்த சில நாள்களாக பல்வேறு ரயில் நிலையங் களிலும் தண்டவாளங்களை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். சில பகுதிகளில் இந்தப் போராட்டம் வன்முறையாக மாறியது.

நவாடாவில், ரயில் பாதை பராமரிப்பு இயந்திரத்தை தீ வைத்து எரித்து, ரயில் நிலைய வளாகங்களை சூறையாடிய சம்பவங்கள் நடந்தன. ஆராவில் பகுதியில் ரயில் பெட்டிக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்தனர். இதேபோல் சீதாமர்ஹி, பக்சர், முசாபர்பூர், சாப்ரா, வைாலி, கயா ரயில் நிலையம் மற்றும் மாநிலத்தின் பிற பகுதிகளிலும் ஏராளமான மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டதாக பாட்னா ரயில் காவல் கண்காணிப்பாளர் பிரமோத் குமார் மண்டல் தெரிவித்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சு நடத்த ரயில் ஆள்தேர்வு வாரிய அதிகாரிகளும் பணியாளர்களும் முயன்றபோது மாணவர்கள் கற்களை வீசியனார்கள் எனவும் கூறப்படுகிறது. இதனால் பொலிஸார் அவர்கள் மீது தடியடி நடத்தியும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் கலைத்துள்ளனர். எச்சரிக்கும் விதமாக ரயிவே பொலிஸார் வானத்தை நோக்கி பல தடவை துப்பாக்கிச் சூடும் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த முறுகல்களில் ஆறுக்கும் மேற்பட்ட பொலிஸாரும் பன்னிரண்டுக்கும் அதிகமான மாணவர்களும் காயமடைந்தனர். போராட்டம் காரணமாக பீகாரின் பல்வேறு பகுதிகளில் புறநகர் ரயில்கள் ஓடவில்லை. இதனால், பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

# இந்திய உச்சநீதிமன்றத்தில் 13 நீதிபதிகளுக்கு கொரோனா



இந்தியத் தலைநகர் டெல்லியில் அதிகரித்த கொரோனாத் தொற்றுக்கு சிறைச்சாலை கைதிகள், பொலிஸார், நாடாளுமன்ற ஊழியர்கள் என பல்வேறு தரப்பினரும் பாதிக்கப் பட்டுள்ளனர். இந்த நிலையல் உச்சநீதிமன்ற நீதிபதிகளையும் ஊழியர்களையும் கூட கொரோனா விட்டு வைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி என்.வி. ரமணா தலைமையிலான அமர்வு முன் வழக்கு ஒன்று தொடர்பாக விசாரணைக்கு ஆஜரான வழக்கறிஞர் ஒருவர், வழக்கை அவசரமாக விசாரிக்க பதிவாளர் அலுவலகம் பட்டியலிடுவதில்லை எனவும் வழக்கை முன் கூட்டியே விசாரிக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

அப்போது பேசிய தலைமை நீதிபதி என்.வி. ரமணா, உச்சநீதிமன்றத்தில் 13 நீதிபதிகளும், 400 ஊழியர்களும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா பாதிப்பால் உடல் ஒத்துழைக்க மறுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். இதை வழக்கறிஞர் புரிந்துகொள்ள வேண்டும், என குறிப்பிட்டார். இதையடுத்து நிலையை தெளிவுபடுத்தியமைக்கு நன்றியையும், சூழ்நிலையைப் புரிந்து கொள்வதாகவும் அந்த வழக்கறிஞர் நீதிபதியிடம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவமே, உச்சநீதிமன்றமும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளமையை வெளிப்படுத்தியுள்ளது.





# எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் பத்ம விருதுகள் பிரதமர் மோடிக்கு ரவிசங்கர் பிரசாத் பாராட்டு

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் பத்ம விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பா.ஜ.க. மூத்த தலைவரும் அக்கட்சியின் எம்.பியுமான ரவிசங்கர் பிரசாத் தமது டுவிட்டரில் பதிவில் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸின் மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத் மற்றும் சி.பி.எம். தலைவரும் மேற்கு வங்கத்தின் முன்னாள் முதல்வருமான புத்ததேவ் பட்டாச்சார்யா ஆகியோருக்கு பத்மபூஷன் விருது வழங்குவது பொது வாழ்வில் அவர்கள் ஆற்றிய பங்களிப்பிற்கான அங்கீகாரமாகும்.

இது பிரதமர் நரேந்திர மோடியின் பெருந்தன்மையையும், ஜனநாயக மதிப்பீடு மீதான அவரது அர்ப்பணிப்பையும் காட்டுகிறது, என்று ரவிசங்கர் பிரசாத் குறிப்பிட்டுள்ளார்.


# பத்ம பூஷன விருதை ஏற்கப்போவதில்லை புத்ததேவ் பட்டாச்சார்யா உடனடி மறுப்பு

இந்தியாவின் 73 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு 2022 ஆம் ஆண்டுக்கான பத்மபூஷன விருதுகள் பெறுபவர்களின் பட்டியலை இந்திய மத்திய அரசு வெளியிட்டது. இதில் மேற்கு வங்காள மாநில முன்னாள் முதலமைச்சர் புத்ததேவ் பட்டாச்சார்யாவின் பெயர் பத்ம பூஷன் விருது பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

விருது விவரம் வெளியான சிறிது நேரத்திலேயே தனக்கு பத்ம பூஷன் விருது வேண்டாம் என அவர் நிராகரித்துள்ளார். இது குறித்து புத்ததேவ் பட்டாச்சார்யா வெளியிட்ட அறிக்கையில், பத்ம பூஷன் விருது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அதைப் பற்றி யாரும் எதுவும் சொல்லவில்லை. எனக்கு பத்ம பூஷன் வழங்கப்பட்டால், அதை ஏற்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பை எதிரொலிக்கும் வகையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், பத்ம பூஷன் விருதுக்கு பரிந்துரைக்கப் பட்ட புத்ததேவ் பட்டாச்சார்யா அதை ஏற்க மறுத்துவிட்டார். அரசின் இத்தகைய விருதுகளை நிராகரிப்பது கட்சியின் நிலையான கொள்கையாகும். எங்களின் பணி விருதுகளுக்காக அல்ல, மக்களுக்கானது. முன்னதாக வழங்கப்பட்ட விருதுகளையும் நமது இயக்கத்தவர்கள் மறுத்துள்ளனர், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் உயரிய விருது அறிவிக்கப் பட்ட சில நிமிடங்களில் அதை வேண்டாம் என்று புத்ததேவ் பட்டாச்சார்யாவுக்கு கூறியிருப்பது அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# கொழும்பு – பொலன்னறுவை கடுகதி ரயில் சேவை வெள்ளி முதல் மட்டக்களப்பு வரைக்கும் விஸ்தரிப்பு

## இரா.சாணக்கியனின் முயற்சிக்குப் பலன்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனினால் முன்வைக்கப்பட்டிருந்த முக்கிய கோரிக்கை ஒன்றை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது.

பொலன்னறுவை முதல் கொழும்பு வரையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் கடுகதி ரயில் சேவையை மட்டக்களப்பிலிருந்து ஆரம்பிக்குமாறு கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வின் போது இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் பொலன்னறுவை முதல் கொழும்பு வரையிலான கடுகதி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

ரயில் சேவையானது பொலன்னறுவையிலிருந்து அதிகாலை 3 மணிக்கு மணிக்கு புறப்பட்டு காலை 9 மணிக்கு கொழும்பினை வந்தடைகின்றது.

அதேபோன்று கொழும்பிலிருந்து மாலை 3.15 மணிக்கு புறப்பட்டு 7.15 மணிக்கு பொலன்னறுவையைச் சென்றடைகின்றது. இந்தநிலையில் அதிகாலை 3 மணிக்கு பொலன்னறுவையில் இருந்து இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு சற்று முன்னராக மட்டக்களப்பில் இருந்து ஆரம்பிக்க முடியுமா என்பதனை ஆராய்ந்து பாருங்கள்.

அதிகமான நேரங்களில் காலியான இருக்கைகளுடனேயே ரயில் கொழும்பைச் சென்றடைகின்றது. பொலன்னறுவையில் இருந்து சேவையை ஆரம்பிக்கின்றமை காரணமாகவே குறைந்தளவானர்கள் பயணிக்கின்றனர்.

எனவே பொலன்னறுவைக்கான ஆசனங்களை ஒதுக்கீடு செய்ததன் பின்னராக, பொலன்னறுவையில் இருந்து இந்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு சற்று முன்னராக மட்டக்களப்பில் இருந்து ஆரம்பிக்க முடியுமா?

ஏனெனில் தற்போது மட்டக்களப்பிலிருந்து கொழும்பிற்கு வரும் ரயில் பயணிப்போர் இரண்டு நாள்களாவது கொழும்பில் தங்கியிருந்து தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது.

எனினும் காலை 9 மணிக்கு கொழும்பிற்கு வருகை தந்தால், தங்களது கடமைகளை பூர்த்தி செய்துகொண்டதன் பின்னர் மீண்டும் அன்றைய தினம் மாலையே மட்டக்களப்பிற்கு திரும்பி செல்ல முடியும்.

நான் பொலன்னறுவை - கொழும்பிற்கான ரயில் சேவைக்கான நேரத்தை மாற்றுமாறு கூறவில்லை அந்த நேரத்திற்கு முன்னராக மட்டக்களப்பிலிருந்து ஆரம்பிக்க முடியுமா என்றே கேட்கின்றேன." - எனக் அன்றைய தினம் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்த போக்குவரத்து அமைச்சர், அதிகாரிகளுடன் பேசிவிட்டு உரிய பதிலை வழங்குவதாக தெரிவித்திருந்தார்.

இதனை தொடர்ந்து கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன் "அதிகாரிகள் இதனை செய்வதற்கு தயாராக இருக்கின்றனர். எனவே வெள்ளோட்ட முறையில் இதனை செய்து பார்க்க முடியுமா?" - எனவும் கேள்வி எழுப்பியிருந்தார்.

சேவையினால் மக்கள் நன்மையடைவார்கள். இவ் சேவையானது மிக விரைவில் எம் மக்களுக்கு கிடைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்தநிலையில் நேற்று(செவ்வாய்கிழமை) வெளியிடப்பட்ட போக்குவரத்து அமைச்சின் அறிவிப்பிற்கு அமைய, பொலன்னறுவை - கொழும்பு கோட்டைக்கு இடையில் இடம்பெறும் புலதுசி அதிவேக குளிரூட்டப்பட்ட ரயில் சேவை நாளை மறுதினம் 28-01-2022 திகதி முதல் மட்டக்களப்பு - கொழும்பு சேவையாக விஸ்தரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில் சேவையானது மட்டக்களப்பிலிருந்து அதிகாலை 01.30 மணிக்கு புறப்பட்டு காலை 08.45 மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடையும்.

மீண்டும் பிற்பகல் 15.05 கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் ரயில் இரவு 21.52இற்கு மட்டக்களப்பு ரயில் நிலையத்தை வந்தடையும் என்பதுக் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தனது கோரிக்கை தொடர்பில் விரைந்து மக்கள் நலன்சார்ந்து செயற்பட்ட அமைச்சருக்கு இரா.சாணக்கியன் நன்றி தெரிவித்துள்ளார்.

## கல்முனை பிரதான பஸ் தரிப்பு நிலைய வளாகம் புனரமைப்பு



கல்முனை பிரதான பஸ் தரிப்பு நிலைய வளாகத்தை புனரமைத்து, அழகுபடுத்தும் வேலைத் திட்டம் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பொறுப்பிலுள்ள நகர அபிவிருத்தி அமைச்சால் தேசிய ரீதியில் 100 நகரங்களை செழுமை மிகு நகரங்களாக அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் கல்முனை நகரமும் உள்வாங்கப்பட்டு, 18.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முதற்கட்டப் பணியாக பஸ் நிலையம் வளாகம் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதியன்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.பி.எஸ்.ஜெயதிஸ்ஸவின் பங்கேற்புடன் மேயர் தலைமையில் இத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த பஸ் நிலைய புனரமைப்பு பணிகள் காரணமாக இங்கு சேவையில் ஈடுபடுகின்ற பஸ்கள், வீதிகளிலும் ஐக்கிய சதுக்கத்திலும் தரித்து நிற்கச் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் இப்புனரமைப்பு பணிகள் இன்னும் துரிதப்படுத்தப்பட்டு மிக விரைவாக நிறைவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என மேயர் ஏ.எம். றகீப் அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசடித்தீவு கோவில் வீதி புனரமைப்பு



*கிழக்கு மாகாணத்தில் ஒரு லட்சம் கிராமிய வீதிகளைப் புனரமைக்கும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசமான படுவான்கரை பகுதியிலும் சேதமடைந்த வீதிகள் தற்போது புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.*

*பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவிட்குட்பட்ட அரசடித்தீவு மாரியம்மன் கோவில் வீதியை புனரமைப்பதற்கான ஆரம்ப பணிகள் மாவட்ட அபிவிருத்தி குழு இணை தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் பணிப்பின் பேரில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.*

*இந்தக் கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இவ் வீதி புனரமைப்புக்காக சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் கொங்கிறீட் வீதி அமைப்பதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் கிராம மக்கள் முன்னிலையில் ஆரம் பிக்கப்பட்டன.*

## மூலிகை உணவுப் பொருள்கள் அறிமுகப்படுத்தல்



கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் நீண்ட தொலைநோக்குப் பார்வையில் உள்நாட்டு மருத்துவத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் முதற்தடவையாக தரமான முறையில் தயாரிக்கப்பட்ட மூலிகை உணவுப் பொருள்கள் சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாண சுதேச வைத்தியத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி இ.ஸ்ரீதரின் ஆலோசனை மற்றும் மேற்பார்வையின் கீழ் சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் 10 வகையான மூலிகை உணவுப் பொருள்கள் தரமான முறையில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

அந்த மூலிகை உணவுப் பொருள்களில் வல்லாரை கேக், அமுக்கரா பிஸ்கட், சத்துமா பிஸ்கட், உடனடி இலைக்கஞ்சி போன்ற 4 வகையான உணவுப் பொருள்கள் முதற்கட்டமாக தயாரிக்கப்பட்டு மாகாண ஆணையாளரினால் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அவர்களிடம் வழங்கி அறிமுகப்படுத்தி வைத்தார்.

இதன்போது கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## பட்டப்பகலில் கொள்ளை முயற்சி

மட்டக்களப்பு ஏறாவூர் 05 ஆம் குறிச்சி பகுதியில் செவ்வாய்க்கிழமை பட்டப்பகலில் வீட்டினுள் நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்த பெண் குடும்பஸ்தர்களை அச்சுறுத்தி நகைகயை கோரியுள்ளனர்.

மோட்டார் சைக்கிளின் இலக்கங்களை மறைத்து வந்து வீட்டினுள் நுழைந்த கும்பல் வாள், கத்தி, தடியுடன் நுழைந்து குடும்பத்தினரை அச்சுறுத்தி நகைகளைக் கோரியுள்ளனர்.

குறித்த வீட்டுக்கு அயலவர்கள் வந்தவேளை கும்பல் அங்கிருந்து சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் அங்கிருக்கும் சி.சி.ரீ.வி. கமெராக்களில் பதிவாகியுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# ஜனாதிபதி கோட்டாவுக்கு உருத்திரகுமாரன் சவால்!



தனது பதவிக் காலத்தில் எவ்வடிவிலும் மனிதவுரிமை மீறல்களை ஆதரிக்கவில்லை. எதிர்காலத்திலும் இத்தகைய எவ்விதச் செயலுக்கும் இடமளிக்க மாட்டோம்.

இத்தகைய செயற்பாடுகளை எவ்வகையிலும் மன்னிக்க மாட்டோம் என்று கூறுரைத்திருந்த இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் துணிவிருந்தால், உரோம் அனைத்துலக சட்டத்துக்கு முன்திகதியிட்டு ஏற்பு வழங்கி, அனைத்துலக பொறுப்புக்கூறல் செயல்வழி இயங்க முதலில் இடமளிக்கட்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் சவால் விடுத்துள்ளார்.

கடந்த ஜனவரி 18 ஆம் நாள் இலங்கை நாடாளுமன்ற அமர்வின் தொடக்கத்தில் ஜனதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆற்றிய உரை தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்குறித்த கூற்றைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

தனது பதவிக் காலத்தில் அரசாங்கம் எவ்வடிவிலும் மனிதவுரிமை மீறல்களை ஆதரிக்கவில்லை என கோட்டாபயவின் கருத்துக்கு பதிலுரைத்த பிரதமர் வி. உருத்திரகுமாரன், போரின் இறுதிக் கட்டங்களில் இழைக்கப்பட்ட குற்றங்கள் அமைப்புசார் குற்றங்களாகும் என்று ஐ.நாவின் முன்னாள் ஆணையாளர் அல்-உசைன் கூறியுள்ளார்.

போரின் இறுதிக் கட்டங்களில் இலங்கை அரசு அக்குற்றங்களைத் திட்டமிட்டு கொடூரமான முறையில் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் தான் நிறைவேற்றியது. தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனிதவுரிமை மீறல்களுக்கும் பன்னாட்டுக் குற்றங்களுக்கும் ஆளுருவமாக ஓர் இனப்படுகொலையாளியாக இவர் இருக்கிறார்.

மேலும் தனதுரையில் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை அறவே இருட்டடிப்புச் செய்யப்பட்டிருப்பதானது, இலங்கையில் ஆழ வேரூன்றிய இனநாய அரச கட்டமைப்புக்கள், தமிழர்களுடன் எவ்வகை அரசியல் தீர்வுக்கும் இடமில்லை என்ற உண்மையையே மீளுறுதி செய்துள்ளது.

மன்னார் மாவட்டத்துக்கு பாசன நீரும் குடிநீரும் வழங்குவதற்கான கீழ் மல்வாத்து ஓயா அணைத் திட்டம், யாழ்ப் பாணத்துக்கு ஆறு' திட்டத்தின் கீழ் புதிய நன்னீர் உப்பங்கழிகள் வளர்ச்சி ஆகியவை உட்பட பற்பலப் பெருவீதத் திட்டப் பணிகள் 'கட்டுமான நிலையில்' இருப்பதாக இலங்கை ஜனாதிபதி கூறியிருப்பவை, தமிழர் நிலங்களை அபகரிப்பதற்கும், சிங்களக் குடியேற்றங்கள் செய்வதற்கு சிங்கள இனவாதம் தனது பழைய இழிவான தந்திரங்களைப் பயன்படுத்த முனைகின்றது என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஏனெனில் தமிழ்ப் பகுதிகளிலும் மகாவெலித் திட்டம் என்ற பெயரில் தமிழர் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டதும், தெற்கிலிருந்து அழைத்துவரப்பட்ட சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டதும் முக்கியமானது. தமிழர்களின் பாரம்பரிய இடமான மணலாறு, வெலிஓயா என பெயர்மாற்றம் செய்யப்பட்டு நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டதும் முக்கியமானது.

தனது தேசம் அனைத்துலக சட்டங்களையும் ஒப்பந்தங்களையும் மதிக்கிறது. மனிதவுரிமைகள் தொடர்பாகக் கடந்த காலத்தில் அனைத்துலக சமூகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ள பிழையான எண்ணங்களைச் சரிசெய்ய வேண்டும். பொறுப்புடன் சொல்லிக் கொள்கிறேன் தனது பதவிக் காலத்தில் எவ்வடிவிலும் மனிதவுரிமை மீறல்களை ஆதரிக்கவில்லை. எதிர்காலத்திலும் இத்தகைய எவ்விதச் செயலுக்கும் இட மளிக்க மாட்டோம். இத்தகைய செயற்பாடுகளை எவ்வகையிலும் மன்னிக்கமாட்டோம் என கோட்டா தெரிவித்திருக்கின்றார்.

உண்மையைத்தான் இவர் சொல்கிறார் என்றால், இவருக்கு அறத் துணிவு இருக்குமானால் றோம் அனைத்துலக சட்டத்துக்கு முன்தேதியிட்டு ஏற்புவழங்கப் அனைத்துலக பொறுப்புக்கூறல் செயல்வழி இயங்க முதலில் இடமளிக்கட்டும்.

இலங்கை ஜனாதிபதிக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன், தாங்கள் இலங்கையின் பாதுகாப்புத் துறைச் செயலராகப் பதவி வகித்த காலத்தில் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களும் போர்க்குற்றங்களும் இழைக்கப்பட்டன என்பதற்கு நம்பகமான சான்றுகள் இருக்கின்றன என ஐ.நா வல்லுநர் குழு அறிக்கையும், ஐ.நா. உள்ளக ஆய்வறிக்கையும் கூறியுள் என.

மேலும் மக்கள் தீர்ப்பாயத்தின் தீர்ப்பில் கோட்டாபய ராஜபக்ஷ தலைமை வகித்த போரின் இறுதிக் கட்டங்களில் இனவழிப்புக் குற்றம் இழைக்கப்பட்டது என்று கூறி இருக்கின்றது.

உண்மையில் இந்த சர்வதேசக் குற்றங்களுக்கு நீதியையும் பொறுப்புக் கூறலையும் வலியுறுத்தியே, ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளர் மிசேல் பசலே அம்மையார், இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தில் கொண்டு சென்று நிறுத்தும்படி பரிந்துரைத்தார்.

அவரது அழைப்புக்கு ஐ.நாவின் முன்னாள் ஆணையார்கள், ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர்கள் பலரும் ஆதரவு தெரிவித்தனர் எனவும் பிரதமர் வி.உருத்திரகுமாரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

## யாழில் பசுமை விவசாயத்துக்கு இராணுவத்தினர் துணை நிற்பர்!

### கட்டளைத் தளபதி யாப்பா உறுதி



யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் பசுமை விவசாயத்திற்கு இராணுவம் தங்களால் ஆன உதவிகளை வழங்குவதோடு பென்றோம் துணை நிற்கும் என யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ஜெனரல் டி ஜி.எஸ். செனரத் யாப்பா தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாய திணைக்களத்தில் இடம் பெற்ற பசுமை விவசாயத்தை ஆரம்பிக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்குத் திட்டத்தின் கீழ் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் வழிநடத்தலில் கீழ் பசுமை விவசாயத் திட்டம் நாடு பூராகவும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த் நிகழ்ச்சித் திட்டத்தின் அங்கமாக யாழ். மாவட்டத்தின் கட்டளைத் தளபதி என்ற வகையில் எனது தலைமையில் மேற்படி செயற்திட்டம் சகல இடங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டம் இரசாயனப் பசளைகளில் இருந்து விடுபட்டு இயற்கைப் பசளையை ஊக்குவித்து அதன்மூலம் பெறப்படுகின்ற ஆரோக்கியமான உற்பத்திப் பொருள்களை மக்களுக்கு வழங்குவதே எமது நோக்கமாகும்.

அண்மையில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் பசுமை விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான திட்டத்தை ஆரம்பித்தோம். திட்டம் தொடர்பில் விவசாயிகளுக்குத் தெளிவுபடுத்தி அவர்களை இந்தத் துறையில் வளர்ச்சி அடையச் செய்வதே எமது நோக்கம்.

பசுமை விவசாயத் திட்டத்தை ஊக்குவிப்பதற்கும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்காக மாவட்ட விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல சேவைத் திணைக்களங்கள் ஊடாகப் பயிற்சிகள் வழங்கப்படும்.

ஆகவே, பசுமை விவசாயத்தை ஊக்குவித்து நஞ்சற்ற உற்பத்திகளை மேற்கொள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட கமநல ஆணையாளர் நிரந்தன், மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன், வடமாகாண விவசாய உதவி பணிப்பாளர் திருமதி அஞ்சேனா ஸ்ரீரங்கன் மற்றும் கமநல உத்தி யோகத்தர்கள், இராணுவ அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## இலங்கைக்கான வெளிநாட்டு தூதரகங்களின் பிரதிநிதிகளுக்கும் பிரதமருக்கும் இடையே சந்திப்பு



இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதரகங்களின் பிரதிநிதிகளுக்கும் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்றுள்ளது.

இராஜதந்திர உறவுகள் தொடர்பில் பிரதமருக்கும் தூதரக பிரதிநிதிகளுக்கும் இடையே சுமுகமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்க, வெளி விவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் (ஓய்வுபெற்ற) ஜயனாத் கொலம்பகே, பிரதமர் அலுவலக பணிக்குழாம் பிரதானி யோஷித ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதரகங்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்

## கிளிநொச்சியில் அதிகரித்துவரும் சட்ட விரோத மண் அகழ்வுகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் நிபந்தனைகளை மீறிய விதத்தில் மணல் கொண்டு சென்றமை என்பவற்றுக்கு எதிராக 610 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ஒரு கோடியே தொண்ணூற்றி எட்டு லட்சத்து 89 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற சட்டரீதியற்ற மணல் அகழ்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி பல்வேறு தரப்பினரும் தமது கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தொடர்ச்சியாகர் பொலிஸாரால் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

2021 ஆம் ஆண்டில் இவ்வாறு அனுமதிப்பத்திரங்கள் இன்றியும், அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியும் மணல் ஏற்றிச் சென்ற வாகனங்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் கடந்த ஆண்டில் மாத்திரம் 610 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ஒரு கோடியே 98 லட்சத்து 89 ஆயிரத்து 500 தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள பொலிஸார் 1005 கியூப் மணல் அரசுடமையாக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மிகவும் மோசமடைகிறது பொருளாதாரம் மீண்டும் பெருந்தொகை பணம் அச்சிடல்!

இலங்கை மத்திய வங்கி மேலும் 26 பில்லியன் ரூபாவை அச்சிட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, மத்திய வங்கி இந்த வருடத்தில் மொத்தமாக 146 பில்லியன் ரூபா பெறுமதியான நாணயத்தாள்களை அச்சிட்டுள்ளது. இதற்கு முன்னர் கடந்த 18 மற்றும் 20 ஆம் திகதிகளில் மத்திய வங்கி நாணயத்தாள்களை அச்சிட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.01.2022இல் வெளியிடப்பெற்றது.